PAGE No.

DATE : / /

# இதழியல்

அலகு : 1

இதழியல் ஓர் அறிமுகம்

அலகு : 2

செய்தித்தாளின் தோற்றமும் வளர்ச்சியும்

அலகு : 3

செய்தியாளரின் வகைகள், தகுதிகள், பொறுப்புகள், பணிகள்

அலகு : 4

இதழியல் சட்டங்கள்

அலகு : 5

இதழ்களின் பகுப்பும் அமைப்பும்

Scanned by CamScanner

# அலகு - 1

# இதழியல் - ஓர் அறிமுகம்

## செய்தித்தாளின் அடிப்படையும் தோற்றமும்

கூட்டு வாழ்க்கையில் மனிதன் ஈடுபட்ட காலத்திலிருந்தே செய்திகளைப் பரிமாறிக் கொள்ளத் தொடங்கியிருக்கலாம். பழங்காலத்தில் 'செய்கைகள்' மூலமும் 'ஒலிகளின்' மூலமும் மனிதர்கள் செய்திகளைப் பரப்பினார்கள்.

சீழ்க்கை ஒலியாலும், பறையறிவித்தும், மணியடித்தும், புகை எழுப்பியும், தீயம்புகள் வானத்தில் எறிந்தும் ஓரிடத்தில் நடப்பதை சுற்று வட்டாரத்து மக்களுக்கு அறிவிக்கும் பழக்கம் வரலாற்றுக் காலத்திற்கு முன்பே தோன்றியதாகும்.

பேச்சுமொழி வளர வாய் வழியாக விரிவாகச் செய்திகளைப் பரப்ப முடிந்தது. ஒருவரை ஒருவர் பார்க்கின்றபொழுது நடப்பு விவரங்களைக் கேட்டறிந்து, அறிந்தவற்றை மற்றவர்களுக்கும் கூறி வந்தனர். இன்றும் செவிவழிச் செய்திகள் விரைந்து பரவுவதைக் காணலாம்.

உதாரணமாக, அன்றைய காலத்தில் இந்தச் செய்தி பரப்பும் பணியினைப் பெண்களே சிறப்பாகச் செய்து வந்தனர். அவர்கள் ஆற்றிலும், ஏரிக்குளத்திலும் தண்ணீர் எடுத்து வரும்பொழுது தங்கள் வீட்டுச்செய்திகளை மற்றவர்களிடத்தும் மற்றவர்களது செய்திகளைத் தாங்களும் பரிமாறிக் கொண்டு வந்தனர். மேலும் வியாபார நிமித்தம்பேரில் வியாபாரிகள் ஊரு விட்டு ஊரு, நாடு விட்டு நாடு சென்று செய்திகளைப் பரிமாறிக் கொண்டனர்.

மேலும் மரபுச் சாதனங்களின் வழியாகவும் அக்காலத்தில் செய்திகளைப் பரிமாறிக் கொண்டனர். அதாவது முரசுகொட்டி ஊரிலுள்ள மக்களைக் கூட்டி செய்திகளை அறிவித்தனர். வெகுதொலைவில் செய்திகளைப் பரிமாறிக் கொள்ள பறவைகளைப் பழக்கப்படுத்தி அதன் கால்களில் செய்திகள் எழுதப்பட்ட ஓலைகளைக் கட்டி செய்திகளை அனுப்பினர்.

பொதுவாக இதழியல் என்ற சொல்லின் பொருள் காலப்போக்கில் மாற்றம் பெற்று வந்துள்ளன. அன்றாடம் வெளிவரும் தினசரிப் பத்திரிக்கையையே இதழியல் என்று முதலில் குறித்தனர். நாளடைவில் இதழியல் என்ற சொல்லின் பொருள் விரிந்து படர்ந்து தகவல் தொடர்பு சாதனங்களையும் குறிக்கத் தொடங்கின. இதழியலுக்கு 'வெப்ஸ்டர்' என்னும் அறிஞர் பின்வருமாறு விளக்கம் தருகிறார்.

*'செய்திகளைச் சேகரிப்பதும் எழுதுவதும்*
*தொகுப்பதும், பதிப்பிப்பதும் பின்*

Scanned by CamScanner

*நாளிதழாகவோ சஞ்சிகையாகவோ*
*வெளியிடுவதுமே இதழியல்'*

மனிதன் எழுதக் கற்றுக்கொண்ட பிறகு எழுத்தின் மூலமும், ஓவியங்களின் வாயிலாகவும் செய்திகளைப் பரப்பினான். ஆட்களை அனுப்பியும், புறாக்களின் கால்களில் ஓலைகளைக் கட்டி அனுப்பியும் செய்திகளைப் பரப்ப எழுத்து முறை துணை செய்தது. எகிப்து நாட்டில் அடிமைகளை வைத்தும், கிரேக்க நாட்டில் குதிரையாட்கள் மூலமும் அரசன் செய்திகளைப் பரப்பியதாக வரலாறு கூறுகின்றது.

செய்தி பரப்பிய நிலை, பண்டைய தமிழ் இலக்கியங்களிலும், இலக்கணங்களிலும் காணப்படுகின்றது. தொல்காப்பியம் தூதினைக் குறிப்பிடுவதோடு,

*'தூதிடையிட்ட வகையின்னும்'*

என்று கூறுவதும், சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள 'அவர் பரவுதலும்' ஒரு வகைச் செய்திப் பரவலாகும்.

*'பறையறைந் தல்லது சொல்லற்க என்னா*
*இறையே தவறுடையான்'*

என வரும் கலித்தொகை அடிகளால் ஊர்ப் பொதுமன்றங்களில் முரசறைந்து செய்தி பரப்பிய நிலையினை அறிந்து கொள்ள முடிகின்றது.

## அரசுச் செய்திகள்

செய்தித்தாட்களின் மூலங்களாக உலகில் பல்வேறு நாடுகளில் மன்னர்கள் தங்களது செய்திகளைப் பரப்ப மேற்கொண்ட முயற்சிகளும், முறைகளும் அமைந்தன.

ரோம் நாட்டை ஆண்ட ஜூலியஸ் சீசர் கி.மு. 60ல் அரண்மனைச் செய்திகளை 'ஆக்டா டைர்னா' (Acta Diurna) என்ற பெயரில் எழுதி பொது இடங்களில் வைத்தார்.

இத்தாலியில் ஆஷ்டிரியா என்ற இடத்தில் அகலமான கற்பாறைகளில் கி.மு. 49ஆம் ஆண்டு பாம்பே (Bombay) மன்னனின் சிறப்புச் செய்தி குறிக்கப்பட்டிருப்பதைக் கண்டுபிடித்துள்ளனர்.

நமது நாட்டில் அசோகரின் கல்வெட்டுக்களை இதழ்களின் முன்னோடியாகக் கொள்ளலாம்.

கி.பி. 8 அல்லது 9ஆம் நூற்றாண்டில் 'பீகிங் கெஜட்' (Peking Gazette) என்ற மரத்தால் செய்த அச்சுக் கருவிகளைக் கொண்டு பத்திரிகை வெளியிடப்பட்டதனை ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இதனையே முதல் பத்திரிகையாகக் கருதலாம்.

## காகிதமும், அச்சுக்கலையும்

இதழியல் வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிந்தவை காகிதமும், அச்சுக் கலையுமாகும். இவை இல்லை என்றால் இதழியல் இந்த அளவிற்கு வளர்ந்திருக்க இயலாது.

Scanned by CamScanner

கி.பி. 105இல் மல்பெரி மரப்பட்டையிலிருந்து சாய்லன் என்ற சீனாக்காரர் முதன் முதலாக காகிதம் செய்வதைக் கண்டுபிடித்தார். அச்சுக்கலையும் முதலில் சீனாவில்தான் தோன்றியது. கி.பி.1450இல் ஜான் கூடர்பர்க், (John Guterberg 1398-1468) என்ற ஜெர்மானியர் முதன் முதலில் அச்சுப்பொறியினைக் கண்டு பிடித்தார். இதன் பின்பு அச்சு எந்திரத்தின் துணையோடு உலகெங்கும் செய்தித் தாட்கள் வெளிவரத் தொடங்கின.

## அச்சிட்ட இதழ்கள்

ஜெர்மனியில் முதன் முதலில் 'செய்தித்துண்டு வெளியீடுகளை' (News Pamphlets) வெளியிட்டனர். ஆனால் இச்செய்தித் துண்டு வெளியீடுகள் தொடர்ந்து வெளிவரவில்லை.

முதன் முதலில் தொடர்ந்து வெளிவந்த இதழ் என்ற பெருமை 'உறவு' (Relation) என்ற இதழையே சேரும்.

ஜெர்மனியைத் தொடர்ந்து ஸ்விட்ஜர்லாந்து, இங்கிலாந்து, பிரான்சு, டச்சு, ஹாலந்து ஆகிய நாடுகளிலிருந்து அச்சிட்ட இதழ்கள் வெளிவந்தன.

1621 முதல் இங்கிலாந்தில் செய்தித் தாட்களை வெளியிட்டனர். 'கோரான்டோ' (Coranto) ஒரு தனித்தாள் செய்தி இதழாக வெளிவந்தது. 1660இல் வாரச் செய்தித்தாட்கள் நிலையான இடத்தைப் பெற்றன. 1665இல் வாரம் இருமுறை வரும் செய்தி இதழாக ஆக்ஸ்போர்டு கெஜட் (Oxford Gazette) வெளியானது. பின்னால் இது இலண்டன் கெஜட் என்று பெயர் மாற்றம் பெற்றது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் முதல் செய்தித் தாள் 1660இல் வெளி வந்தது. "உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பொதுவாக ஏற்படுபவை" (Public Occurances Both Foreign and Domestic) என்ற பெயரில் பிரிட்டிஷ்காரரான பெஞ்சமின் ஹாரிஸ் (Benjamin Harris) ஓர் இதழைத் தொடங்கினார். முதல் அமெரிக்க செய்தி இதழை ஜான் கேம்ப்பெல் (John Campbell) என்ற அமெரிக்கர், "பாஸ்டன் செய்திக் கடிதம்" என்ற பெயரில் புதுப்பித்தார். 1783 முதல் அமெரிக்க நாளிதழ் வெளிவந்தது. ருஷ்யாவில் '1703இல் இதழ்கள் வெளிவரத் தொடங்கியதாகக் கூறுகின்றனர்.

## 'இதழியல்'

இன்றைய உலகில் மனிதனை வழி நடத்திச் செல்வதில் இதழ்கள் பெரும்பணி புரிந்து வருகின்றன. நாளும் புதிய செய்திகளை, மக்கள் மனநிலை யறிந்து இதழ்கள் வெளியிட்டு வருகின்றன. மக்களின் வாழ்க்கையில் இதழ்களின் தாக்கங்களைத் தெளிவாகக் காண முடிகின்றது.

இன்று மக்களிடையே படிக்கும் ஆர்வத்தைத் தூண்டுவதில் இதழ்கள் போட்டி போட்டுக் கொண்டு வருகின்றன. இதழியல் என்பது ஜர்னலிசம் (Journalism) என்பதன் தமிழ்ச் சொல் ஆகும். பத்திரிகையியல் என்றும் வழங்கப்படுகிறது. பத்திரிகை என்னும் சொல் வடசொல் ஆகும். வடமொழியில் 'பத்ர' என்பதற்கு 'இலை' என்றும் 'கடிதம்' என்றும் பொருள் ஆகும்.

Scanned by CamScanner

பண்டைக்காலத்தில் பனை ஓலைதான் எழுதுவதற்குப் பயன்பட்டது. எழுதுவதற்குரிய பனை ஓலை 'ஏடு' என அழைக்கப்பட்டது. அக்காலத்தில் மன்னர்கள் சிறிய திரைச்சீலைகளில் தூரிகை கொண்டு கடிதங்களை எழுதி அனுப்பினார்கள். அக்கடிதங்களும் 'ஓலை' என்றே அழைக்கப்பட்டன. ஆரம்பத்தில் 'இலை' என்றும் 'கடிதம்' என்றும் பொருள் தந்த பத்ர என்னும் சொல்லானது பிறகு பல்வேறு செய்திகள் அடங்கிய தொகுப்புக்குப் பெயராக வரும்போது 'பத்திரிகா' என அழைக்கலாயிற்று. எனவே அச்சொல்லே இதழியலுக்குப் பெயராக அமைந்து விட்டது.

அதிகமான அளவு மக்கள் தொகைப் பெருக்கத்தாலும் இத்தொழிலில் மக்களின் தேவைகள் பெருகிவிட்டதாலும் காலை இதழ், மாலை இதழ், வாரம் இருமுறை, வாரம் ஒருமுறை, திங்கள் இருமுறை, மாதம் ஒருமுறை, காலாண்டு இதழ், அரையாண்டு இதழ், ஆண்டு இதழ், வெள்ளி விழா இதழ், பொன் விழா இதழ், மணிவிழா இதழ், வைர விழா இதழ், பவளவிழா இதழ் எனப் பல வகைகளாகப் பெருகியுள்ளன. அவை மக்களுக்குச் சேவையாற்றி வருகின்றன. அவைகள் தோன்றிய வரலாறு, அவைகளின் பயன், பண்பாடு, பணிகள் ஆகியவைகளைப் பற்றிய படிப்பே 'இதழியல்' ஆகும்.

## இதழைக் குறிக்கும் சொற்கள்

தமிழில் இதழைக் குறிக்க 'இதழ்', 'ஏடு', 'சஞ்சிகை', 'தாளிகை', பத்திரிகை' ஆகிய சொற்கள் பயன்படுகின்றன. இவற்றுள் பத்திரிகை, சஞ்சிகை என்பன வடமொழிச் சொற்கள், இதழ், ஏடு, தாளிகை என்பன தமிழ்ச் சொற்கள் ஆகும்.

மக்கள் 'இதழ்' என்னும் சொல்லையே மிகுதியாகப் பயன்படுத்து கின்றனர். சில இடங்களில் அவர்கள் புரிந்து கொள்வதற்கு ஏற்ப, 'பத்திரிகை' என்னும் சொல் பயன்படுகிறது.

'இதழ்' என்ற சொல் இலை, உதடு, கண்ணிமை, பனையேடு, பாளை, பூவிதழ் என்ற பொருள்களைக் குறிக்கின்றது என்பர். (ச.வே.சுப்பிரமணியன், தமிழிலக்கியக் கொள்கை 9, ப.260). தனித்தமிழ் இதழ்கள் 'இதழ்' என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றன.

'தென்மொழி' தன்னைத் தனித்தமிழ் இலக்கியத் திங்கள் 'இதழ்' என்றுதான் குறிக்கின்றது. ஆய்வாளர்களும் 'இதழ்' என்ற சொல்லைப் பயன் படுத்துகின்றனர். 'சித்தாந்த சங்கிரகம்' (1877) 'இதழ்' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறது. (மா.ரா.இளங்கோவன், முற்காலத் தமிழ் இதழ்கள் ஓர் அறிமுகம்).

இவற்றின் வாயிலாக 1877ஆம் ஆண்டிலேயே அல்லது அதற்கு முன்பிருந்தே 'இதழ்' என்ற சொல் இதழைக் குறிக்கப் பயன்பட்டமையை அறிய முடிகின்றது.

Scanned by CamScanner

'ஏடு' என்னும் சொல் கண்ணிமை, பனையேடு, பாலாடை, பூவிதழ் ஆகிய பொருள்களைச் சுட்டுகின்றது. 'சஞ்சிகை' என்னும் சொல் 'சஞ்சரித்தல்' என்ற சொல்லில் இருந்து தோன்றியது. 'சஞ்சரித்தல்' என்பதனைப் 'பேசுதல்', 'திரிதல்', 'வாழ்தல்' என்னும் பொருளில் வழங்குவர். (ச.வே.சுப்பிரமணியன், தமிழிலக்கியக் கொள்கை–9).

இதழைக் குறிக்கும் சொற்களுள் ஒன்றாகக் கருதப்படுவது. 'தாளிகை' ஆகும். 'தாளிகை' என்னும் தனித்தமிழ்ச் சொல்லை இன்று பெரும்பாலோர் கையாளவில்லை. 'தாளிகை' என்னும் சொல்லைத் தாள் + இகை எனப் பிரிக்கலாம். 'தாள்' என்ற சொல் இலை, ஓலை, இதழ், ஏடு என்ற பொருள்களையும் அச்சடிக்கப் பயன்படும் தாளையும் குறிக்கின்றது. 'இகை' என்பது கொடுத்தல், நடத்தல் என்ற பொருளுடையது. அதனால் 'தாளிகை' என்ற சொல் 'தாள்வழி செய்தி முதலியவற்றைக் கொடுத்தல்' என்பதே இதழைக் குறிப்பதற்கு ஏற்ற சொல்லாகும். (காரை இறையடியான், தனித்தமிழ் தாளிகைகளின் இலக்கியக் கோட்பாடு).

'பத்திரிகை' என்னும் சொல்லுக்கு 'இலை', 'ஒற்றை', 'ஓலையுறுதி' 'திருமுகம்' முதலான பொருள்கள் உண்டு. (தமிழிலக்கியக் கொள்கை–9).

## இதழியலுக்குரிய இலக்கணம்

"இதழ்களுக்கும் செய்தித்தாட்களுக்கும் எழுதும் தொழிலைத்தான் இதழியல் என்னும் சொல் குறித்தது. இப்பொழுது அதன் பரப்பும் பொருளும் விரிவடைந்து செய்திகளையும் கருத்துகளையும் பரப்புகின்ற ஒரு மக்கள் தொடர்பு நிறுவனமாகவும், சமுதாய விழிப்புணர்ச்சியின் ஒரு உறுப்பாகவும் அதன் நடவடிக்கைகளுக்கு அற அடிப்படையிலும் சட்டநோக்கிலும் பொறுப் பேற்கும் அமைப்பாகவும் இதழியல் விளங்குகிறது" என்று ஆர் இராமச்சந்திர ஐயர் என்பவர் இதழியலுக்கு இலக்கணம் வகுத்துள்ளார்.

"வெளியிடுவதற்காகவோ, பதிப்பிக்கப்படுவதற்காகவோ, ஒலிபரப்பு வதற்காகவோ நடைமுறை ஈடுபாடுள்ள விவரங்களைத் தொகுப்பதும் எழுதுவதும் செப்பனிடுவதும்தான் இதழியல்" என்று வெப்ஸ்டரின் மூன்றாவது பன்னாட்டு அகராதியில் விளக்கப்பட்டுள்ளது.

"பொது இதழ்களுக்கு எழுதுவது, அவற்றை நடத்துவது ஆகிய தொழில்தான் இதழியல்" என்று சேம்பரின் இருபதாம் நூற்றாண்டு அகராதி குறிப்பிடுகின்றது.

## ஹெரால்டு பெஞ்சமின் கருத்து

அமெரிக்க இதழியல் பேராசிரியர் ஹெரால்டு பெஞ்சமின் என்பவர், "பொது நோக்கமுள்ள இதழியலாவது ஒரு ஆற்றல் மிக்க கருவியாகும். அதன் மூலம்தான் இன்றைய சமுதாயமானது தன்னுடைய வழிகளை அமைத்துக் கொண்டும் மாற்றிக் கொண்டும் தெளிவாகவரையறுக்கப் பெற்ற வளரும் மனிதநலன் என்னும் இலட்சியத்தை நோக்கி நடை பயில்வதாகும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

Scanned by CamScanner

**ஜி.எப்.மோட்**

"இதழியல் என்பது பொது மக்கள் தொடர்புக்குரிய புதிய சாதனங்களைப் பயன்படுத்திப் பொதுவான செய்திகளையும், பொதுக் கருத்துக்களையும் பொதுப் பொழுது போக்குகளையும் முறையாக, நம்பிக்கைக்குரிய வகையில் பரப்புவதாகும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

**லார்டு கிர்ரே**

"பத்திரிகை, நாட்டின் மிகச் சிறந்த, மிகப் பெரிய காவலாளி" என்கிறார் லார்டு கிர்ரே.

**மேத்யூ ஆர்னால்டு**

"இதழியலானது அவசரத்தில் பிறக்கும் இலக்கியமாகும்" என்று குறிப்பிட்டுள்ளார் மேனாட்டறிஞர்.

**பிராங்க் மோர்ஸ்**

'பெரும்பாலும் இதழ்கள் அறிவிப்பன யாவும் வரலாற்றுக்கு மூலப் பொருளாகவும் வரலாற்றாசிரியர்களுக்குப் பயன்படுவதாகவும் அமைகின்றது" என்கிறார்.

**இதழியல் - ஓர் அறிவியல்**

தொடக்க காலத்தில் இதழியலில் யார் வேண்டுமானாலும் எப்படியும் ஈடுபடலாம் என்ற நிலைமை இருந்தது. தற்போது தக்க பயிற்சி இல்லாமல் இதழியலில் ஈடுபட இயலாது என்ற அளவிற்கு இதழியல் ஓர் அறிவியலாக வளர்ச்சியடைந்துள்ளது.

அறிவியல் என்னும் சொல் காரண, காரியம் முதலானவற்றுக்குரிய தொடர்பைப் பற்றிய ஒழுங்குபடுத்தப் பெற்ற அறிவின் தொகுதியைக் குறிக்கின்றது. உண்மைகளை மொத்தமாகத் தொகுப்பது மட்டும் அறிவியலாகாது. அவற்றினை முறைப்படி தொகுத்து, வகைப்படுத்தி, பகுத்தாய்ந்து கூறுவதே அறிவியலாகும். இந்த விளக்கத்தின்படி இதழியலும் ஓர் அறிவியலே.

ஓர் இதழ் உருவாகும் நிலையைத் தொடக்கம் முதல் இறுதிவரை அறிவியல் நோக்கில் முறைப்படுத்தியுள்ளனர். செய்திகளைச் சேகரிப்பது, எழுதுவது, செப்பனிடுவது, அச்சிடுவது, வெளியிடுவது ஆகிய அனைத்தும் ஆய்வு முறையிலேயே அமைகின்றது. ஆகவேதான் இதழியல், சமுதாய அறிவியல்களில் (Social Science) ஒன்றாகச் சிறப்பிடம் பெற்று விளங்குகின்றது.

**இதழியல் - ஓர். கலையியல்**

அறிவியலாக விளங்கும் இதழியல் ஓர் அற்புதக் கலையியலாகவும் (Art) திகழ்கின்றது.

உள்ளத்து உணர்வுகளை, உணர்ச்சிகளை அழகாக வெளிப்படுத்தி, மகிழ்ச்சியை வழங்கி, ஓர் உயர்ந்த குறிக்கோளை நோக்கி நம்மை அழைத்துச்

Scanned by CamScanner

செல்வதே கலையியல் பணி எனக் கருதப்படுகிறது. இத்தகைய இயல்புகள் அனைத்தும் இதழியலில் ஒளிர்கின்றன.

சிறந்த இதழ் என்பது காண்பவர் கண்ணைக் கவர்ந்திழுத்து, படிக்கத் தூண்டிவிட வேண்டும்; 'கூறுகின்ற கருத்துகளாலும் முறையாலும் வாசகரை ஈர்க்க வேண்டும்; தெளிவை ஏற்படுத்திச் செயல்படத் தூண்ட வேண்டும். கலை உள்ளம் கொண்டவர்களால்தான் நல்ல கலை மணம் பரப்பும் இதழ்களை உருவாக்க முடியும்.

இதழ்கள் எனப்படுபவை இப்போது எல்லாத் துறைகளிலும் ஈடுபட்டு ஒரு பொறுப்பான சமுதாய சக்தியாக உருவெடுத்துள்ளன. மக்களுக்கு கருத்துகளையும் கொள்கைகளையும் விளக்கிக் கூறுவதும் அவர்களின் எண்ணங்களையும் புரிந்து கொள்ளுதல் அவசியமாகும். அதற்கு உதவியாக அமைபவை இதழ்களாகும்.

நமது நாட்டில் நாடாளுமன்றம், நிர்வாகத்துறை, நீதித்துறை ஆகிய மூன்று துறைகளுடன் பத்திரிகைத் துறையையும் ஒரு முக்கியமானதாகக் கருதலாம். நான்காவது துறையானது (பத்திரிகைத் துறை) சுதந்திரமாகவும் நேர்மையாகவும் பொறுப்போடும் செயல்பட்டால்தான் மக்கள் நலன் பாதுகாக்கப்படும்

1828இல் 'அரசியல் நிர்ணய வரலாறு' பற்றி கட்டுரை எழுதி புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியர் மெக்காலே (Macaulay) முதன் முதலில் இதழியலாளர்களை "அரசின் நான்காம் தூண்" (Fourth Estate) என்று வருணித்தார்.

## இதழ்களின் நோக்கங்கள்

இன்றைய உலகில் ஆற்றல் மிக்கவைகளாக விளங்கும் இதழ்களால் சிறந்த பயன்கள் கிடைக்க வேண்டுமானால் அவை தங்களது பணிகளைச் செவ்வனே செய்ய வேண்டும். நேர்மையான உண்மையான மக்களாட்சி செயல்பட வேண்டுமானால் எல்லா மக்களும் ஆட்சியில் பங்கு பெற வேண்டும். அதற்கு இதழ்கள் துணைசெய்கின்றன.

"வாளைவிட பேனாமுனை வலுவுடையது" என்பதை உலகெங்கும் இதழியலாளர்கள் உணர்த்தியுள்ளனர்.

நமது நாட்டின் விடுதலைக்காக இதழ்கள் செய்த அரும்பணியை மறக்க இயலாது. அன்றைய இதழியலாளர்கள் உயர்ந்த நோக்கோடும் தியாக உணர்வோடும் நடத்திய இதழ்கள் நாட்டு மக்களைத் தட்டி எழுப்பின.

மக்கள் தகவல் தொடர்பில் (Mass Communication) இதழ்கள் சிறந்ததொரு இடத்தைப் பெறுகின்றன. இதனை ஆர்.கே. சாட்டர்ஜி, "மக்கள் தகவல் தொடர்பு உண்மையான நடவடிக்கைகள், கொள்கைகள், திட்டங்கள் ஆகியவற்றினை ஒட்டியும், நாடு தனக்கு முன் வைத்திருக்கும் தேவைகள், கொள்கைகள் ஆகியவற்றினைச் சார்ந்தும் செயல்படுகின்றது. இது ஓர் உயிரோட்டமான இயலாகும். பத்திரிகைத்துறை மக்களுக்குத் தெரிவிப்

Scanned by CamScanner

பதையோ, கற்பிப்பதையோ மட்டும் செய்வதில்லை; பொதுப்பணிகளின் கண்காணிப்பாளராகவும் மக்கள் உரிமைகளின் பாதுகாவலராகவும் செயல் படுகின்றது.

## உயர்ந்த இலட்சியம்

இதழ்கள் சிறந்த குறிக்கோளோடு செயல்பட வேண்டும். மக்களுக்குத் தொண்டு செய்யும் நோக்கமின்றி, வெறும் ஆதாய நோக்கத்தோடு செயல்படும் இதழ்களால் சமுதாயத்திற்குக் கிடைக்கும் பயன்களைவிட கேடுகளே மிகுதியாக இருக்கும்.

"செய்தித்தாளின் நோக்கங்களில் ஒன்றாக, மக்களின் உணர்வினை அறிந்து, அதனை வெளியிட வேண்டும். மற்றொன்று, மக்களிடம் சில மிகவும் வேண்டிய உணர்வுபூர்வமான எண்ணங்களை உருவாக்க வேண்டும். மூன்றாவதாக, பொது மக்களிடம் இருக்கும் குறைகளையும் துணிச்சலாக எடுத்துரைக்க வேண்டும்" என்று உத்தமர் காந்தியடிகள் தமது சுயசரிதையில் குறிப்பிட்டுள்ளார்.

இங்கிலாந்தின் பத்திரிகை மன்றமானது (Press Council) பத்திரிகைகள் எப்படிப்பட்ட குறிக்கோள்களுடன் அமைய வேண்டும் என்று குறிப்பிடுகையில், "அநீதியை வெளிக்காட்டுவது, தவற்றைத் திருத்துவது, ஆலோசனை வழங்குவது, நண்பர்கள் இல்லாதவர்களோடு நட்புக் கொள்வது, ஆதரவற்றவர்களுக்கு உதவுவது ஆகியவை செய்தித்தாட்கள் செய்ய வேண்டிய சேவைகளில் அடங்கும். பொதுக் காரணங்களை எடுத்துக் கொண்டு தேவையானால் போராட்டங்கள் நடத்தவும் வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளது.

## இதழ்களின் பணிகள்

இதழ்களின் பணிகளை, மரபு வழியில் அவை செய்கின்ற 'பொதுப் பணிகள்' என்றும் மாறி வருகின்ற சமுதாயத்தில் மேற்கொள்ளப்படுகின்ற 'வளர்ந்து வரும் பணிகள்' எனவும் இருவகையாகப் பிரிக்கலாம்.

## பொதுப்பணிகள்

1. அறிவித்தல் (To inform)
2. அறிவுறுத்தல் (To instruct)
3. மகிழ்வித்தல் (To entertain)
4. வாணிபம் செய்தல் (To merchandise)

என்னும் நான்கு பணிகளை ஆற்றிட வேண்டும். இவையே 'பொதுப் பணிகள்' எனப்படும்.

### 1. அறிவித்தல்

எல்லா விவரங்களையும் மக்களுக்கு உடனுக்குடன் உண்மையாக விருப்பு – வெறுப்பின்றி முழுமையாக வழங்குவது இதழ்களின் தலையாயப் பணியாகும். இதழ்களின் முக்கியப் பணியே மக்களிடம் செய்திகளைப் பரப்புவதாகும்.

Scanned by CamScanner

நாட்டில் காணப்பெறும் சமுதாயம், அரசியல், பொருளாதாரம், கலை, பண்பாடு ஆகியவை தொடர்பாக நடைபெறும் எல்லா நடவடிக்கைகளையும் விளக்கிக் கூறுகின்ற பொறுப்பான பணியை இதழ்கள் செய்கின்றன. மக்கள் அறிய விரும்புகின்ற விலைவாசிகள், விளையாட்டு முடிவுகள், நடைபெறப் போகும் நிகழ்ச்சிகள் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியதாக இதழ்கள் திகழ வேண்டும். இந்த வகையில் இதழ்கள் நடப்பு நிகழ்ச்சிக் களஞ்சியங்களாகும்.

“இதழியல் நடப்பு நிகழ்ச்சிகளையும் கருத்துகளின் போக்குகளையும் மக்களுக்குத் தெரிவிக்கவும், விரிந்து செல்லும் பரப்பில் ஆர்வத்தை ஏற்படுத்தவும், கட்டிக்காக்கவும் பல்வேறு வகையான கருத்துக்களையும் வெளிக்காட்டும் வகையில் நடைமுறைச் சிக்கல்களைப் பற்றிய விவாதத்தைத் தூண்டவும் முயல வேண்டும். இவற்றிற்கெல்லாம் செய்திகளையும் (News) கண்ணோட்டங்களையும் (Views) துல்லியமாக நடுநிலையில் வெளியிடுவதும் மோதுகின்ற இலட்சியங்களை பற்றின்றி மதிப்பீடு செய்வதும் தேவையான தாகும்'' என்று அகில இந்திய செய்தித்தாள்களின் ஆசிரியர்கள் கூட்டம் (All India Newspaper-Editors Conference) முதல் பத்திரிகை குழு (First Press Commission) விளக்கம் கூறியிருக்கின்றது.

## 2. அறிவுறுத்தல்

இதழ்கள், செய்திகளை வெளியிடுவது மட்டுமல்லாமல் தேவையான விவரங்களை முழுமையாக வழங்கி மக்களைச் சிந்திக்கச் செய்து, கல்விப் பணியாற்ற வேண்டும்.

நல்ல இதழ்கள் மக்களிடம் தொடர்கல்வியை வளர்க்கும் சாதனங்களாக விளங்குகின்றன. இதழ்களைப் படித்து, அறிஞர்களின் கருத்துக்களை அறிந்து வாழ்க்கையில் முன்னேறி வெற்றி பெற்றவர்கள் உள்ளனர். புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் இதழ்களின் கல்விப்பணியை இலக்கிய நயத்தோடு பின்வருமாறு எடுத்துரைத்துள்ளார்.

*“அறிஞர் தம் இதய ஓடை*
*ஆழநீர் தன்னை மொண்டு*
*செறிதரும் மக்கள் எண்ணம்*
*செழித்திட ஊற்றி ஊற்றிக்*
*குறுகிய செயல்கள் தீர்த்துக்*
*குவலயம் ஓங்கச் செய்வாய்!*
*நறுமண இதழ்ப் பெண்ணே உன்*
*நலம் காணார் ஞாலம் காணார்”*

என்றும்,

*“தெருப்பெருக் கிடுவோருக்கும்*
*செகம்காக்கும் பெரியோருக்கும், கை*
*இருப்பிற் பத்திரிகை நாளும்*
*இருந்திடல் வேண்டும்! மண்ணிற்*

Scanned by CamScanner

*கருப்பெற் றுருப் பெற்றின நடை*
*பெற்றுப் பின்னர் ஐந்தே ஆண்டு*
*வரப்பெற்றார், பத்திரிகை நாளும்*
*உண்டென்றால் வாழ்க்கை பெற்றார்!"*

என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நமது நாட்டில் அரசு பல்வேறு வகையான முன்னேற்றப் பணிகளை மேற்கொள்கின்றது. அவற்றைப் பற்றிய அறிவும் தெளிவும் மக்களுக்கு ஏற்பட வேண்டும். இதற்கு உதவும் வகையில் தலையங்கங்கள் எழுதியும் சிறப்புக் கட்டுரைகள், கருத்துப் படங்கள், விளக்கப் படங்கள் வெளியிட்டும் இதழ்கள் மக்களின் அறிவை வளர்க்கத் துணை செய்கின்றன.

## 3. மகிழ்வித்தல்

வாசகர்கள் சோர்ந்து விடாமலிருக்கும்பொருட்டு சிறுகதைகள், ஓவியங்கள், கவிதைகள், கட்டுரைகள், நகைச்சுவைகள், சமுதாயத்தில் புகழ் பெற்றோரின் நேர்காணல்கள், திரைப்பட விமர்சனங்கள், நடிகர் நடிகைகளைப் பற்றிய துணுக்குகள், விந்தைமிகு செயல்கள் முதலானவற்றை வெளியிடுகின்றன. இவை வாசகர்களை மகிழ்விப்பதோடு, இதழ்களைக் கவர்ச்சியுடையனவாகவும் மாற்றுகின்றன.

வாரமலர், சிறுவர் மலர், மங்கையர் மலர், சிறப்பு மலர்கள் மக்களை மேலும் மகிழ்விப்பனவாகும்.

## 4. வாணிபம் செய்தல்

இதழ்கள் அச்சிடுவதே விற்பனை செய்வதற்காகத்தான். எனவே, அவை வாணிப நோக்கத்தோடும் செயல்பட வேண்டியுள்ளது. வருவாய் தேடிக் கொள்ளும் இதழ்களால்தான் கருத்துக்களைத் துணிச்சலாகக் கூற முடியும். விளம்பரங்களை இதழ்கள் வெளியிடுவதன்மூலம் தங்களது வருவாயைப் பெருக்கிக் கொள்கின்றன. இவ்விளம்பரங்கள் நாட்டின் வாணிப வளர்ச்சிக்கும் வழி வகுக்கின்றன. இதழ்கள் குறைந்த விலையில் கிடைப்பதற்கு விளம்பர வருவாய் பெருமளவு துணை செய்கின்றது.

## வளர்ந்து வரும் பணிகள்

1. இன்றைய இதழ்கள் சமுதாய மாற்றத்திற்கு வழி காட்டுகின்றன.
2. நாட்டில் ஏற்படுகின்ற மாற்றங்களின் சிறப்புகளையும் குறைகளையும் சுட்டிக் காட்டுகின்றன.
3. நல்ல மாற்றங்கள் வேரூன்றி வளர ஆக்கமும் ஊக்கமும் தருகின்றன. சான்றாக, தீண்டாமை ஒழிப்பு, வரதட்சணை மறுப்பு, பெண்கல்வி எழுச்சி ஆகியவற்றிற்கு இதழ்கள் ஆற்றியிருக்கும் தொண்டு குறிப்பிடத் தக்கதாகும்.
4. கலையிலும் இலக்கியத்திலும் சமுதாயப் பழக்க வழக்கங்களிலும் புதிய முறைகள் (New Styles) நுழைய இதழ்கள் வாய்ப்பளிக்கின்றன.

Scanned by CamScanner

5. தமிழிலக்கியத்தில் சிறுகதை, புதுக்கவிதை போன்ற வடிவங்கள் தமிழ் இதழ்களின் மூலம் செழித்து வளர்கின்றன.
6. மக்களிடம் பல புதுமைகளைப் படிப்படியாய் இதழ்கள் புகுத்துகின்றன.
7. இதழியல் பணிகளில் புலனாய்வுப் பணியும் ஒன்றாகும். புலனாய்வு இதழியல் (Investigative Journalism) தமிழில் வேகமாக வளர்ந்து வருகின்றது.
8. அரசியலில் மிகப்பெரிய திருப்பங்களையும் மாற்றங்களையும் பத்திரிகைகளில் வெளிவரும் புலனாய்வு அறிக்கைகள் ஏற்படுத்துகின்றன.

# இதழ்களின் பொறுப்புகளும் கடமைகளும்

## இதழ்களின் பொறுப்புகள்

1. ஆற்றல் மிக்க தொடர்புச் சாதனங்களாக இதழ்கள் விளங்குவதால் அவை மிகவும் பொறுப்புடன் செய்திகளை வெளியிடவேண்டும்.
2. இதழ்கள் எந்தச் செய்தியை வெளியிட்டாலும் நம்புகின்ற மனப்பான்மை மக்களிடையே இருக்கின்றது.
3. எனவே, செய்தித்தாள்களில் வெளிவருபவை எல்லாம் சரியானவைதானா என்பதை அறியக்கூடிய வாய்ப்புகள் வாசகர்களுக்கு இல்லை. சரியான செய்திகளையே இதழ்கள் வெளியிட வேண்டும்.
4. சந்தேகத்திற்குரிய எந்தச் செய்தியையும் வெளியிடக் கூடாது.
5. தற்போது அறிவியல் தொழில் நுட்பத்தின் விளைவாக பத்திரிகைகளுக்கு ஏராளமான செய்திகள் விரைவாகக் கிடைக்கின்றன. அவைகளை முழுமையாக வெளியிடாமல், மக்களுக்குப் பயன்படும்படியான செய்திகளைத் தேர்ந்தெடுத்து, சுருக்கமாக, தெளிவாக, அழகிய மொழி நடையில் வெளியிட வேண்டிய பொறுப்பு பத்திரிகைகளுக்கு இருக்கின்றன.

## 6. ஜான் ஹோஹன்பெர்க் கூற்று

இதழ்களின் பொறுப்புகள் குறித்து ஜான் ஹோஹன் பெர்க், "விரிவடைந்து வரும் செய்தித் தொடர்பு இதழியலாளருக்கு, இதற்கு முன்பு இருந்ததைவிட இப்பொழுது மிகப்பெரிய அளவில், பொறுப்பை அளித்திருக்கின்றது. செய்திகளுக்கு எண்ணமுடியாத அளவு மிகுதியாக வாசகர்களும் இருப்பதால் பொறுப்பு மிகவும் அதிகமாகின்றது" என்று குறிப்பிட்டுள்ளார்.

சமுதாயத்தில் அமைதியைக் கெடுக்கும் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது. சில நேரங்களில் எங்கோ ஒரு மூலையில் நடைபெற்ற சண்டைக்கு சாதி, சமய வண்ணம் பூசி வெளியிடுவதால் அமைதி கெடுகின்றது.

## இதழ்களின் கடமைகள்

1. மக்களிடம் பொதுக் கருத்தை (Public opinion) உருவாக்கும் வாய்ப்பும் ஆற்றலும் இதழ்களுக்கு இருக்கின்றன. தவறான கருத்தை வளர்த்து விட்டால், பின்பு இதழ்களே முயன்றாலும் மாற்ற முடியாது.

Scanned by CamScanner

ஆகவே கண்ணும் கருத்துமாக நல்லனவற்றை வளர்க்கும் கடமையும் பொறுப்புகளும் இதழ்களுக்கு உள்ளன.

2. இதழ்கள் நாட்டின் நலனையும் குறிக்கோள்களையும் மனதில் கொண்டு செயல்பட வேண்டும்.

3. நாட்டுப்பற்றும், பொதுமக்கள் நலம் காக்கும் உணர்வும் இதழியலாளர்களுக்குத் தேவை. சான்றாக, ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்குவது நாம் ஏற்றுக்கொண்ட நாட்டுக் கொள்கையாகும். இதற்கேற்பச் செயல்படுவது இதழ்களின் கடமையாகும்.

4. விற்பனையை மட்டுமே நோக்கமாகக் கொண்டு இன உணர்வுகளைத் தூண்டுதல், பாலுணர்வைத் தூண்டுதல், வன்முறையைத் தூண்டுதல் போன்ற சமூக விரோதப் போக்கினை இதழ்கள் மேற்கொள்ளக் கூடாது. இதழ்களின் தரத்தைக் காக்க வேண்டியது இதழ்களின் கடமையாகும்.

# இதழ்களுக்கெனக் குறிப்பிடும் விதிமுறைகள்

## இதழியல் விதிகள் (Canons of Journalism)

1923ஆம் ஆண்டு செய்தித்தாள் ஆசிரியர்களின் அமெரிக்க சங்கம் சில இதழியல் விதிகளை உருவாக்கித் தந்திருக்கின்றது. இதழியலாளர்கள் அவற்றினை உணர்ந்து செயல்பட்டால் தரமான இதழ்களை உருவாக்க முடியும். அவை வருமாறு :

1. பொறுப்புடைமை (Responsibility)
2. பத்திரிகைச் சுதந்திரம் (Freedom of the press)
3. தனித்துவம் (Independence)
4. நம்பிக்கை, உண்மை, துல்லியம் (Truthfulness, Accurancy)
5. பக்கம் சாராமை (Impartiality)
6. நியாயமான நடவடிக்கை (Fair play)
7. பண்பாடு (Decency)

### 1. பொறுப்புடைமை

வாசகர்களைக் கவர்வதற்காகப் பல்வேறு வழிமுறைகளைப் பின்பற்றும் உரிமை இதழ்களுக்கு உண்டு. ஆனால் இந்த விதிமுறைகளைப் பயன்படுத்தும் போது அவை பொதுமக்களின் நலனைக் கெடுக்காமல் செயல்பட வேண்டிய பொறுப்புணர்ச்சி இதழ்களுக்கு இருக்க வேண்டும்.

### 2. பத்திரிகைச் சுதந்திரம்

பத்திரிகைகளுக்கு சட்டத்திற்குப் புறம்பாகச் செல்லாமல் எவற்றைப் பற்றியும் வெளியிடவும் விவாதிக்கவும் சுதந்திரம் இருக்க வேண்டும். இது அடிப்படை உரிமைகளில் ஒன்றாகும்.

Scanned by CamScanner

## 3. தனித்துவம்

பொதுமக்கள் நலனுக்கு எவ்விதத் தீங்கும் விளைவிக்கா வண்ணம் பத்திரிகைகள் தனித்து இயங்க வேண்டும். அவ்வாறு தனித்து இயங்கப்படும் உரிமைகளைப் பயன்படுத்தும்போது பத்திரிகைகள் தன்னிலை கருதி செய்திகளைப் பயன்படுத்தக்கூடாது; தெரிந்தே ஒருபக்கம் சார்ந்தோ, உண்மைக்குப் புறம்பாகவோ, தவறான விளக்கங்கள் தருவதோ, விமர்சிப்பதோ கூடாது.

## 4. நம்பிக்கை, உண்மை, துல்லியம்

1. இதழ்கள் நம்பிக்கையாகவும், உண்மையாகவும், துல்லியமாகவும் செய்திகளை வெளியிட வேண்டும்.
2. வேண்டுமென்றே செய்திகளைத் திரித்தோ, முரண்பட்ட வகையிலோ வெளியிடுவது மன்னிக்க முடியாத குற்றமாகும்.
3. செய்திகளின் உள்ளடக்கத்தினை ஒட்டியே செய்திகளுக்குத் தலைப்புக் கொடுக்க வேண்டும்.
4. வீண் கவர்ச்சிக்காகத் தொடர்பின்றித் தலைப்புகள் தரக்கூடாது.

## 5. பக்கம் சாராமை

1. நடுநிலைமையோடு செய்திகளை வெளியிட வேண்டும்
2. செய்தி அறிக்கைகளையும் (News reports) கருத்துக்களின் வெளியீடு களையும்(Expression of opinions) வேறுபடுத்திக் காட்ட வேண்டும்.
3. செய்திகளின் கோணங்களை மாற்றி, வாசகர்களை திசை திருப்பக் கூடாது.

## நாளிதழ்கள்

ஒவ்வொரு நாளும் வெளியிடப்படும் செய்தி இதழ்களை நாளிதழ்கள், நாளேடுகள், திசைகள் எனலாம். காலையில் வெளியிடப்பட்டால் 'காலை இதழ்' என்றும் மாலையில் வெளியிடப்பட்டால் 'மாலை இதழ்' என்றும் அழைக்கப் படுகின்றன.

## பருவ இதழ்கள்

ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் வருவதைக் கால இதழ்கள் (Periodicals) அல்லது பருவ இதழ்கள் (Magazines) என்று அழைக்கின்றோம். வாரம், மாதமிருமுறை, மாதம் ஒருமுறை, காலாண்டுக்கு ஒரு முறை, அரையாண்டுக்கு ஒரு முறை, ஆண்டுக்கு ஒரு முறை என இதழ்கள் வெளிவருகின்றன.

## தன்மை அடிப்படைப் பகுப்பு

யாருக்காக இதழ்கள் வெளியிடப்படுகின்றன என்ற தன்மையின் அடிப்படையில் கீழ்க்காணும் வகையில் பகுக்கலாம். அவை முறையே,

Scanned by CamScanner

1. தரமான இதழ்கள் (Standard Magazines)

2. மக்கள் இதழ்கள் (People Magazines)

3. நச்சு இதழ்கள் (Yellow Journals)

## 1. தரமான இதழ்கள்

புலமை மிக்கவர்கள் படிக்கக்கூடிய இதழ்களை உயர்தரமான இதழ்கள் எனக் கூறலாம். (உம்) ஆராய்ச்சி இதழ்கள், செந்தமிழ்ச் செல்வி, தென்மொழி, குறள்மலர்.

## 2. மக்கள் இதழ்கள்

எல்லா வகையான மக்களும் எளிதாக, பொழுதுபோக்கு நோக்கில் படிக்கக் கூடியவற்றை 'மக்கள் இதழ்கள்' என அழைப்பர். தமிழில் வெளி வருகின்ற பெரும்பாலான இதழ்கள் இவ்வகையைச் சார்ந்தவையாகும்.

## 3. நச்சு இதழ்கள்

படிக்கின்றவர்களின் உள்ளத்தைக் கெடுக்கும் வகையில் செய்திகளையும் கட்டுரைகளையும் கொண்ட இதழ்கள் சில வருகின்றன. இவற்றினை 'மஞ்சள் இதழ்கள்' என்றும் கூறுவர். இவற்றால் சமுதாயத்திற்குக் கேடுகளே மிகுதியாக இருக்கும்.

## இந்தியாவில் தொடக்ககால இதழ்கள்

இந்தியாவில் இதழியல் உருவாவதற்குப் பணியாற்றிய ஆரம்பகால எழுத்தாளர்கள் பலர். அவர்களுள் முதன்மை இடத்தைப் பெற்று இதழியல் உலகில் ஒருதனியொரு இடத்தை வகிப்பவர் ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி ஆவார். ஏனெனில், இந்தியாவில் முதன் முதலில் அச்சிடப்பட்ட முழுமையான செய்தித் தாளைக் கொண்டு வந்த பெருமை இவரையே சாரும்.

1766இல் பத்திரிகை வெளியிடுவதற்காக பதிவு செய்து கொண்டு வில்லியம் போல்ட்ஸ் என்பர் முயற்சி செய்தார். ஆனாலும் இவர் முயற்சி தோல்வியுற்றது. ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி 1780ஆம் ஆண்டு கல்கத்தாவில் ஜனவரி 29ஆம் நாள் தி பெங்கால் கெஸட் அல்லது 'கல்கத்தா ஜெனரல் அட்வர்டைசர்' என்ற இதழை வெளியிட்டார். ஹிக்கி ஆரம்பித்த பெங்கால் கெஸட் என்ற பத்திரிகை 'ஹிக்கியின் கெஸட்' என்னும் பெயரிலும் அழைக்கப் பட்டது.

ஏனெனில், வாரப் பத்திரிகையாகிய அப்பத்திரிகைக்கு நிறுவனர், ஆசிரியர், அச்சகர் ஆகிய அனைத்துப் பொறுப்புகளையும் ஏற்றுச் செயல் படுத்தியவர் அவரே. இரண்டு பக்கங்களை மட்டுமே உடையது. ஆங்கில மொழியில் வெளிவந்தது. இவ்விதழில் விளம்பரங்கள் அதிகமாகவும் செய்திப் பகுதிகள் குறைவாகவும் இருந்தன. தனிப்பட்ட மனிதர்கள் மீதான விமர்சனங்கள் இவ்விதழில் இருந்தன.

Scanned by CamScanner

இவ்விதழ் தாங்கி வந்த செய்திகள் அப்போதைக்கப்போது வரும் புதுச் செய்திகளாக இல்லாமல், ஐரோப்பியச் செய்தித்தாள்களில் ஏற்கனவே வெளிவந்த செய்திகளில் இருந்து வடிவமைக்கப்பட்டு வெளியிடப்பட்டன. ஹிக்கி தனது இதழை "எல்லாக் கட்சியினருக்கும் ஏற்ற அரசியல் மற்றும் வணிகப் பத்திரிகை" என்று குறிப்பிட்டார். உள்ளடக்கம், அச்சு, வெளியீடு முதலிய அனைத்திலும் இவ்விதழ் ஒரு முன்னோடியாக அமைந்தது. இந்தச் செய்தித் தாள்தான் இந்திய இதழியலின் தொடக்கமாக அமைந்தது.

இந்தச் செய்தித்தாள் இரண்டாண்டுக்காலம் மட்டுமே வெளிவந்தது. பத்திரிகைச் சுதந்திரத்திற்காக அந்நாளில் இச்செய்தித்தாள் மிகுதியும் போராடியது. கல்வி உரிமை, பேச்சுரிமை, அரசியல் உரிமை, சிந்தனை உரிமை, செயல் உரிமை முதலியவற்றிற்காகப் பெங்கால் கெசட் முன் நின்றது. இந்திய இதழியல் தோன்றிய காலம் தொட்டே அவ்வப்போது இருந்து வந்த அரசாங்கங்களுடன் போராட வேண்டிய சூழலில் இந்திய இதழியல் இருந்து வந்தது. இத்தகைய போராட்ட மரபினைத் தொடங்கி வைத்தவர் ஹிக்கியே யாவார்.

ஹிக்கி ஏழ்மைநிலையில் இருந்த ஒரு மனிதரேயானாலுமம தான் எடுத்த ஒவ்வொரு செயலையும் துணிச்சலுடன் எதிர் கொண்டார். எனவேதான் 'இந்திய இதழியலின் தந்தை' என்று இவர் இன்றளவும் போற்றப்படுகின்றார்.

ஹிக்கி தனது செய்தித்தாளில் அப்போது இந்தியாவை ஆண்டுவந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் பிரபு உள்ளிட்ட கிழக்கிந்தியக் கம்பெனியைச் சேர்ந்த நிர்வாகத்தினர்களைச் சாடி எழுதினார். வாரன் ஹேஸ்டிங்ஸின் மனைவி பற்றித் தாக்கி எழுதியபோது கவர்னர் ஜெனரல், பெங்கால் கெஸட்டுக்கு எதிராகச் செயல்பட வேண்டிய சூழல் உருவாயிற்று. இதன் விளைவாகத் தபால் மூலம் இப்பத்திரிகையை அனுப்பும் வசதியை வாரன்ஹேஸ்டிங்ஸ் நீக்கினார். இதுவே இந்தியாவில் இதழாளர்மீது முதன் முதலில் எடுத்த நடவடிக்கை. ஆட்சியாளர்களுக்கும் பத்திரிக்கைக்கும் நடந்த மோதல்களில் முதலாவதும் இதுவே. இதன் பின்னர் ஹிக்கி யாரையாவது தாக்கி எழுதும்போதெல்லாம் அவரது பத்திரிகை பல இடர்பாடுகளைச் சந்திக்க வேண்டிய நிலை இருந்தது.

முடிவில் அவருக்கு நான்கு மாதச் சிறைத்தண்டனையும் 500 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. ஹிக்கி சிறையில் அடைக்கப்பட்ட போதும் அவரது பத்திரிகை தொடர்ந்து வெளிவரும்படி ஏற்பாடு செய்தார். இதனால் ஆட்சியாளரின் கோபம் அதிகரித்தது. அப்போதும் வாரன்ஹேஸ்டிங்ஸ், தலைமை நீதிபதி ஆகியோரைப் பற்றிய ஊழல்களைச் சுட்டிக்காட்டி எழுதத் தவறவில்லை.

எனவே ஆட்சியாளர்கள் பல்வேறு அபராதங்களை அவர் மீது விதித்தும் கோபம் தணியவில்லை. இறுதியில் 1782ஆம் ஆண்டு மார்ச் மாதம் அவரது அச்சு இயந்திரங்களையும் அச்சு எழுத்துக்களையும் பறிமுதல் செய்தனர். அதன் பின்னர் அவர் நாடு கடத்தப்பட்டார். இவ்வாறு இந்தியாவில் தொடங்கப்பட்ட

Scanned by CamScanner

முதல் இதழ் இரண்டே ஆண்டுகளில் ஆங்கிலேயர்களால் இழுத்து மூடப்பட்டது. இருப்பினும் இந்திய இதழியல் வரலாற்றில் பத்திரிகைச் சுதந்திரத்திற்காக ஹிக்கி நடத்திய போராட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

## ஜேம்ஸ் சில்க் பக்கிங்ஹாம்

ஹிக்கியின் இதழுக்குப் பின்னர் இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்ட இரண்டாவது செய்தித்தாள் 'இந்தியா கெஜட்' என்பதாகும். இது 1780ஆம் ஆண்டு நவம்பரில் தொடங்கப்பட்டது. பெர்னார்டு மெஸ்ஸிங், பீட்டர் ரிட் ஆகிய இருவரும் வணிகத்தை விரிவுபடுத்தும் நோக்கில் இவ்விதழைத் தொடங்கினர். அதன் பின்னர், இந்தியாவில் அரசினரின் செய்திகளை வெளியிடுகின்ற அரசிதழாகக் 'கல்கத்தா கெஜட் 1784இல் வெளிவந்தது. இதன் பின்னர் சென்னை, பம்பாய், கல்கத்தா முதலான இடங்களில் பல்வேறு செய்தித் தாள்களும் சஞ்சிகைகளும் வெளியாயின.

1807ஆம் ஆண்டில் கல்கத்தாவிற்கு அருகில் செராம்பூரில் கிறித்தவர்கள் நிறுவிய அச்சகத்திலிருந்து கிறித்தவ மதத்தைப் பரப்பும் இதழ்கள் பல வெளிவந்தன. இச்சூழலில் ஹேஸ்டிங்ஸ் பிரபு ஆளுநராகப் பதவி ஏற்றார். இவர் வெல்லெஸ்லி பிரபு கொண்டு வந்திருந்த இதழ்கள் ஒழுங்குமுறைச் சட்டத்தின் கடுமையான பகுதிகளை நீக்கினார். இதழ்கள் சமுதாய விழிப்புணர்ச்சிக்குப் பயன்பட வேண்டும் என்று இவர் கருதினார். இந்திய இதழ்களைத் தம் எதிரியாகக் கருதாத ஆங்கில அதிகாரியாக இவர் திகழ்ந்தார்.

1818ஆம் ஆண்டில் ஹேஸ்டிங்ஸ் ஒழுங்கு முறைச் சட்டங்கள் நடைமுறைக்கு வந்த பின்னர், இவரால் தொடங்கப்பட்ட இதழ் 'கல்கத்தா ஜெர்னல்' என்பதாகும். 1828ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2ஆம் தேதி இவ்விதழைத் தொடங்கினார்.

பக்கிங்ஹாம் ஒரு கப்பல் மாலுமியாக இருந்தவர். அவர் அடிமைகள் அடங்கிய கப்பல் ஒன்றை நடத்திச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்ட பொழுது அத்தொழிலை விட்டுவிட்டுப் பத்திரிகைத் துறைக்கு வந்தார். இவ்வனுபவத்தைத் தன் பத்திரிகையில் விறுவிறுப்பான பயணக் கட்டுரைகளாக எழுதினார். இதனால் வாசகர் மத்தியில் இவருக்கு செல்வாக்கு ஏற்பட்டது. பத்திரிகைச் சுதந்திரம் பற்றி நல்ல கண்ணோட்டம் உடையவராக இருந்தார்.

இப்பத்திரிகையின் நிறுவனர் ஜான்பால்மர் ஒரு வியாபாரி கல்கத்தா ஜெர்னல் வாரமிருமுறை இதழாக வெளிவந்தது. இதன் விலை ஒரு ரூபாய் தான். மக்களுக்குத் தேவையான செய்திகளைத் தெரிந்தெடுத்துத் தன் இதழ்களில் அவற்றை இடம்பெறச் செய்தார். அரசின் குறைகளையும் அதிகாரியின் குற்றங்களையும் எடுத்துக் காட்டியதுடன் அவற்றைக் கடுமையாக விமர்சிக்கவும் செய்தார்.

## வாசகர் கருத்து

பக்கிங்ஹாம் மனிதநேயம் உள்ள ஒரு சிறந்த மனிதர். எனவே இவரது நல்ல இயல்புகள் பல பத்திரிகையில் வெளியிடப்பட்டன. பத்திரிகைகளில்

Scanned by CamScanner

'வாசகர் கருத்து' பகுதி இடம் பெறச் செய்தார். அதில் வாசகர்களிடமிருந்து வரும் கடிதங்களை அந்நாளிலேயே வெளியிட்ட பெருமை இவரையே சாரும். இப்பகுதியில் வாசகர்களும் உள்நாட்டு விவகாரங்களை விவாதித்தனர்.

## இவ்விதழின் சிறப்பியல்பு

ஆங்கில இலக்கியத்தில் பைரனின் டான் யுவான் (Don Yuvan) மற்றும் வால்டர் ஸ்காட்டின் இவான் ஹோ (Ivanhoe) போன்ற சிறந்த படைப்புகள் வாசகர்களுக்கு இவ்விதழ்மூலம் அறிமுகப்படுத்தப்பட்டன. எனவே மக்களால் இப்பத்திரிகை பெரிதும் விரும்பி வரவேற்கப்பட்டது. 1000 பிரதிகள் வரை இவ்விதழ் விற்பனையாயிற்று. இவ்விதழின் புகழ் மெல்ல மெல்ல அதிகரித்தது.

## சமகால இதழ்கள்

'இந்திய கெஜட்', பெங்கால் ஹாரகாரு, 'ஆசியாட்டிக் மிர்ரர்' முதலான இதழ்கள் சமகாலத்தைச் சார்ந்தவையாகும். கல்கத்தா ஜெர்னலின் வளர்ச்சியைக் கண்டு சமகால இதழ்கள் பொறாமையால் எதிர்த்தன. ஆனால் மற்றொருபுரம் இராணுவ அதிகாரிகள் முதல் வியாபாரிகள் மற்றும் கிழக்கிந்திய கம்பெனி அலுவலர்கள் வரை இப்பத்திரிகையை ஆதரித்தனர். இரண்டாண்டுகளில் பத்திரிகையின் விலையைப் பக்கிங்ஹாம் குறைத்தார். பத்திரிகையின் போக்கு நாட்டின் அரசியல் வளர்ச்சிக்குத் துணை நின்றது.

## செய்தி எழுதும் முறை

செய்தி எழுதும் முறையில் பக்கிங்ஹாம் நடுநிலையான அணுகுமுறையைப் பின்பற்றினார். தலைமை நீதிபதி, சென்னையின் ஆளுநர், கல்கத்தாவில் இருந்து பிஷப் போன்ற யாரையும் தனது எழுத்தில் தாக்குவதற்கு இவர் அஞ்சவில்லை. இது சம்பந்தப்பட்டவர்களுக்குக் கோபத்தை ஏற்படுத்தியது. அவர்கள் பக்கிங்ஹாமுக்கு எச்சரிக்கைக் கடிதம் விடுத்தனர்.

## ஜான்புல் இன் த ஈஸ்ட் (John Bull in the East)

கல்கத்தா ஜெர்னலின் புகழ் அதிகமாக அதிகமாக பிற பத்திரிகைகள் ஒவ்வொன்றாக மூடப்படலாயின. இவ்வெற்றிடத்தை நிரப்ப கிழக்கிந்தியக் கம்பெனியின் சில பணியாளர்களால் 'ஜான் புல் இன் த ஈஸ்ட்' (John Bull in the East) என்ற பத்திரிகை தொடங்கப்பட்டது. இதன் முதல் இதழ் 1821ஆம் ஆண்டு ஜூன் 3ஆம் நாள் வெளிவந்தது. இவ்விதழ் நேரடியாகக் கல்கத்தா ஜெர்னலுடன் மோதுவதாக அமைந்தது.

இருப்பினும் பத்திரிகைச் சுதந்திரம் வேண்டியும் பெண்கள் உடன்கட்டை ஏறும் வழக்கத்தை அடியோடு ஒழிக்க வேண்டும் எனவும் தம் இதழ்களில் இவர் கட்டுரைகள் வெளியிட்டார். மக்களின் முன்னேற்றத்தைப்பற்றிச் சிந்தித்தமையால் பக்கிங்ஹாம் மக்கள் மனத்தில் இடம் பெற்றிருந்தார். இதன் பின்னர் ஹேஸ்டிங்ஸ் பிரபு தனது பதவிக்காலம் முடியவே பதவி இறங்கினார்.

1823இல் 'ஜான் ஆடம்' இந்தியத் தலைமை ஆளுநர் பொறுப்பை ஏற்றார். ஏற்கனவே இவர் பக்கிங்ஹாம்மீது பொறாமையும் வெறுப்பும் கொண்டிருந்தார்.

Scanned by CamScanner

எனவே தான் பதவியேற்றதும் பக்கிங்ஹாம் சமுதாய அமைதிக்குப் பங்கம் விளைவிக்கின்றார் என்று குற்றம் சாட்டி அவரை இங்கிலாந்து நாட்டிற்கு நாடு கடத்தினார்.

## இராஜாராம் மோகன்ராய்

இந்தியாவின் சீர்திருத்தச் செம்மல்களுள் மிகவும் குறிப்பிடத்தக்கவர் இராஜாராம் மோகன்ராய் ஆவார். 'இந்திய மொழி இதழ்களின் தந்தை' என்று அழைக்கப்படுகிறார். இவர் ஹீக்கிலி மாவட்டத்திலுள்ள இராதா நகரில் 1772 மே 22இல் பிறந்தார்.

இவருக்கு ஒன்பது வயதிற்கு முன்பே, இவர் தந்தையின் ஏற்பாட்டின்படி மூன்று முறை திருமணம் செய்யப்பட்டது. பெற்றோரால் ஏற்பாடு செய்யும் குழந்தைத் திருமண முறை அப்போது நடைமுறையில் இருந்தது. வாழ்க்கைப் பொறுப்பினை உணர்வதற்கு முன்பே செய்விக்கப்படுகின்ற இத்திருமண முறையைப் பற்றி அவர் இளம் வயதிலேயே சிந்தித்துப் பார்த்திருக்கிறார்.

இவர் இந்து சமயத்தில் நிலவி வந்த உருவ வழிபாட்டையும் பெண்கள் உடன்கட்டை ஏறும் வழக்கத்தையும் கண்டித்து எழுதினார். செராம்பூர் கிறித்தவ இயக்கம் 1813ஆம் ஆண்டு முதல் 1818ஆம் ஆண்டு வரை 'திக்தர்சன்' 'சமாச்சார் தர்பன்' ஆகிய வங்கமொழி இதழ்களையும் 'ஃப்ரண்ட் ஆப் இந்தியா' என்ற ஆங்கில மொழி இதழையும் வெளியிட்டது. இந்து சமயக் கோட்பாடுகளைச் செராம்பூர் கிறித்தவ இயக்க இதழ்கள் விமர்சிக்கத் தொடங்கியபோது, அவற்றிற்குப் பதிலடி கொடுப்பதற்காக இராஜாராம் மோகன்ராய் இதழியலில் ஈடுபட்டார்.

### இதழ்கள்

1. பிராமனிக்கல் மேகசின் – வங்காள மொழி இதழ்
2. பிராமின் சேவதி – ஆங்கில மொழி இதழ்
3. சம்பாத் கௌமதி – 1821 – வார இதழ்
4. மீரட் அல் அஹ்பர் – பெர்சியன் மொழி – வார இதழ்

### இதழின் கொள்கை

"சமுதாயச் சீர்திருத்தத்தில் மக்கள் ஆர்வம் கொள்ளும் வகையில் எழுதுவேன். மக்களின் மனப்போக்கை ஆட்சியாளர்கள் அறியச் செய்வேன். ஆட்சியாளர்களின் சட்டங்களையும் வாழ்வு முறைகளையும் மக்களுக்கு உணர்த்துவேன். மக்கள் தங்களுக்கு வேண்டிய நன்மைகளை ஆட்சியாளர் களிடம் கேட்டுப்பெறச் செய்வேன். மக்களுக்கென விதிக்கப்பட்டிருக்கும் சட்டங் களிலுள்ள உயர்வு தாழ்வினை எடுத்துரைப்பேன்" என்று தன் கொள்கைகள்யைத் தன் இதழின் முதல் பதிப்பில் வெளியிட்டுள்ளார்.

### பத்திரிகைச் சுதந்திரம்

ஆங்கில அரசின் 'இந்தியமொழி இதழ்கள் கட்டுப்பாட்டுச் சட்டம் 1823–இல் (Vernacular Press Act of 1823) இதழ்களுக்குக் கொண்டு வந்த முன்

Scanned by CamScanner

அனுமதி, தணிக்கை, எச்சரிக்கைகள், கைது, சிறைச்சாலை, தண்டம் முதலியவற்றை எதிர்த்து, இதழ்களுக்குக் கருத்துச் சுதந்திரம் வேண்டி நின்றார் இராஜாராம் மோகன்ராய்.

இந்திய இதழ்களுக்குப் பத்திரிகைச் சுதந்திரம் வேண்டி இவர் இந்திய ஆளுநரிடம் அளித்த அறிக்கையை 'இந்திய இதழ்களின் ஆரியோபெஜடிகா' என்று அழைத்தனர்.

## உடன்கட்டை ஏறுதல்

1822இல் 'சந்திரிகா சமாச்சார்' என்னும் இதழைப் பெண்களுக்காகத் தொடங்கி, உடன்கட்டை ஏறும் பழக்க ஒழிப்பு, பெண் கல்வி பெறல், விதவை மறுமணம் போன்றவற்றை வலியுறுத்தி எழுதி வந்தார்.

இதன் விளைவாக 1829இல் வில்லியம் பெண்டிங் பிரபுவின் உதவியால் உடன்கட்டை ஏறும் பழக்கம் ஒழிக்கப்பட்டது. இவ்வாறு இதழியல் வாயிலாக சமுதாயப் பணியினையும் இந்து மதச் சீர்திருத்தத்தையும் மேற்கொண்ட செயல் வீரராக இராஜாராம் மோகன்ராய் திகழ்ந்தார்.

## இதழ்களின் பணிகளும் பயனும்

பின்வரும் பாரதிதாசன் பாடலில் இதழ்களின் பணிகளும் பயனும் அடங்கியிருத்தலைக் காணமுடிகின்றது.

*காரிருள் அகத்தில் நல்ல கதிர்ஒளி நீயே! இந்தப்*
*பாரிடைத் துயில்வோர் கண்ணில் பாய்ந்திடும் எழுச்சி நீதான்*
*ஊரினை நாட்டை இந்த உலகினை ஒன்று சேர்க்கப்*
*பேரறிவாளர் நெஞ்சில் பிறந்த பத்திரிகைப் பெண்ணே!*

தினசரி படித்துக் கொண்டே இருக்க வேண்டும். அப்பொழுதுதான் என்றைக்கும் புது மனிதனாக இருக்க முடியும். இல்லாவிடில் உலகத் தொடர்பிலிருந்து ஒதுக்கப்படுவான். முதுமையிலும் கற்கப் பயன்படுபவை இதழ்களாகும்.

## பொறுப்புகள்

அமெரிக்க இதழியல் வல்லுநரான 'டுவானே பிராட்லி' இதழ்களின் பொறுப்புகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.

1. தகவல் வழங்குவது
2. மக்கள் பணி
3. பொழுதுபோக்கு
4. செய்திகளைப் புரிந்துகொள்ள விளக்கமளிப்பது
5. தொடர்ந்து வெளிவர வேண்டும்

## பயன்கள்

1. பாடநூல்களில் பெற இயலாத செய்திகளைச் செய்தி இதழ்களில் பெற முடிகின்றது.

Scanned by CamScanner

2. ஊர் நடப்பைத் தெரிந்து கொண்டு, உலகத்துடன் ஒட்ட ஒழுக இதழ்கள் உதவுகின்றன.

3. செய்தித் தொடர்பினால் உலக உருண்டை நம் உள்ளங்கை அளவாகச் சுருங்கிவிட்டது.

4. அரசுக்கும் மக்களுக்கும் இடையே இதழ்கள் தொடர்பு ஏற்படுத்துகின்றன.

5. அரசின் திட்டங்களை, பணிகளை, மக்களுக்குத் தெரிவிக்கின்றன.

6. அரசின் குறை நிறைகளைத் தெரிவிக்கின்றன.

7. மக்களின் குறைகளையும் அரசைப் பற்றிய கருத்துகளையும் அரசுக்கு எடுத்துரைக்கின்றன.

8. பெரிய அரசியல் மாற்றங்களுக்கும் இதழ்கள் துணைபுரிகின்றன.

9. அரசு, பாராளுமன்றம், நீதிமன்றம், இதழ்கள் முதலானவை நான்கு தூண்களாகக் கருதப்படும்.

10. ஆங்கிலப் பேரரசின் நான்காவது சொத்து என்று இதழ்களைக் குறிப்பிடுகிறார்கள்.

11. மக்கள் அரசிலும் நான்காவது தூணாக இதழ் விளங்குகிறது.

## இதழ்கள் இயங்க வேண்டிய முறை

நாளுக்கு நாள் புதிய இதழ்கள் தோன்றுகின்றன. இவ்விதழ்கள் ஒழுக்கத்தையும் உயர்ந்த எண்ணத்தையும் போற்றுவனவாக விளங்க வேண்டும். செய்திகளை உடனுக்குடன் தெரிவித்தல், சுவைபட அளித்தல் முதலானவை இதழ்களின் குறிக்கோளாக இருக்க வேண்டும். மக்களின் நடைமுறைச் சிக்கல்களை எடுத்துரைக்க வேண்டும்.

இதழ்கள் செயல்பட வேண்டிய மூன்று நெறிகளைக் காந்தியடிகள் குறிப்பிடுகையில்,

"பொதுமக்களின் உணர்ச்சிகளைப் புரிந்து கொண்டு அவற்றை வெளிப்படுத்துவதே இதழ்களின் நோக்கமாக இருக்க வேண்டும். சிறந்த உணர்வுகளை மக்களிடையே எழுப்ப வேண்டும். குறைகளை அச்சமின்றி எடுத்துரைக்க வேண்டும்" என்றார் (ச.வே.சுப்பிரமணியன், தமிழிலக்கியக் கொள்கை, ப.260)

## இதழ்களின் முக்கியத்துவம்

1. கலை வளர்ச்சி, பண்பாட்டு வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி என அனைத்துத் துறை வளர்ச்சிக்கும் இதழ்கள் துணை புரிகின்றன.

2. அன்றாட நிகழ்ச்சிகளை உடனுக்குடன் தெரிவிப்பவை செய்தித்தாள்களே.

3. வீட்டுக்குள் இருந்தபடியே உலகைக் காண உதவும் மாயக் கண்ணாடி செய்தித்தாளேயாகும்.

4. தமிழுக்குப் புதிய புதிய சொற்களைப் படைத்துக் கொடுத்தவை இதழ்களாகும்.

Scanned by CamScanner

5. மனிதனுக்கு அமுதசுரபியாக இதழ்கள் உதவுகின்றன.

6. மக்களிடம் நல்ல உணர்வுகளை வளர்ப்பது இதழ்களாகும்.

7. கருத்துத் தெரிவிப்பதும் இதழ்களேயாகும்.

## மக்களாட்சியில் இதழியல் பணிகள்

1. செய்திகளைப் பரப்புகின்ற மக்கள் தொடர்புச் சாதனமாக இதழ்கள் விளங்குகின்றன.

2. ஜனநாயகத்தின் மக்களாட்சி சீரும் சிறப்புமாகச் செயல்பட இதழ்கள் துணைபுரிகின்றன.

## நேரு பெருமகனார் கூற்று

“தற்கால வாழ்க்கையில் குறிப்பாக மக்களாட்சியில் ஆற்றல் மிக்க உறுப்புகளில் ஒன்றாக பத்திரிகை (Press) இருக்கின்றது. பத்திரிகையிடம் எல்லையற்ற சக்தியும் பொறுப்புகளும் உள்ளன. பத்திரிகையை மதிக்க வேண்டும்” என்று கூறுகின்றார்.

பொதுவாக இதழ்கள் பல பணிகளைச் செய்தாலும் மக்களாட்சியில் இவை சில குறிப்பிடத்தக்க பணிகளைச் செய்து வருகின்றன. அப்பணிகளின் விவரம் வருமாறு :

1. செய்தி பரப்பும் பணி

2. விளக்கப் பணி

3. விமர்சனப் பணி

4. கருத்தை உருவாக்கும் பணி

5. காவல் பணி

## 1. செய்தி பரப்பும் பணி

மக்களுக்குத் தேவையான செய்திகளையும் கருத்துகளையும் உடனுக்குடன் சரியான முறையில் பரப்ப வேண்டும். முக்கியமான செய்திகளை இதழ்கள் தந்நலம் கருதி இருட்டிப்புச் செய்யக் கூடாது.

## 2. விளக்கப் பணி

இதழ்கள் செய்திகளை வெளியிடுவதோடு அவை தொடர்பான எல்லா விவரங்களையும் தெரிவித்து, கல்வியை வழங்கவும் தேவையானால் அறிவுறுத்தவும் வேண்டும். இம்முறையில் கேலிச் சித்திரங்கள், விளக்கப்படங்கள், படங்கள், கேள்வி – பதில்கள், சிறப்புக் கட்டுரைகள் முதலியன அடங்கும். மறைக்கப் பட்ட. மறைந்து கிடக்கும் விவரங்களை வெளிக்கொணர்கின்ற ‘புலனாய்வுப் பணியை’ (Investigative Function) மக்களாட்சியில் சில இதழ்கள் திறம்படச் செய்கின்றன.

## 3. விமர்சனப் பணி

செய்திகளை வெளியிட்டு விளக்கினால் மட்டும் போதாது. அவை பற்றி விமர்சனமும் விவாதமும் செய்யலாம். எதனைப் பற்றியும் இரண்டு வகையான

Scanned by CamScanner

கருத்துகள் இருக்கலாம். உண்மையை உணர்த்தவும் தெரிவிக்கவும் இத்தகைய விமர்சனங்களும் விவாதங்களும் உதவும்.

## 4. கருத்தை உருவாக்கும் பணி

பத்திரிகைகள் மக்களிடையே பொதுக் கருத்துகளை உருவாக்கும் பணியைச் செய்ய வேண்டும். மக்கள் செய்திகளைப் படித்து நல்லவை, கெட்டவைகளை உணர்ந்து, சொந்தக் கருத்துக்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் மக்கள், தேர்தல் காலங்களில் தங்களது வாக்குச் சீட்டுகளைச் சரியாகப் பயன்படுத்த இதழ்கள் துணைபுரிய வேண்டும். எனவே தான் அறிஞர்கள், "பத்திரிகையும் வாக்குச் சீட்டும் மக்களாட்சியில் இரட்டைக் குழல் துப்பாக்கி" என இதழ்களைப் போற்றியுள்ளனர்.

இதழ்கள் பொதுக்கருத்தை உருவாக்கியதோடு மட்டுமன்றி, அதனை ஆட்சியாளர்கள்அறியவும் செய்ய வேண்டும். 'ஆசிரியருக்குக் கடிதங்கள்', 'மக்களின் கருத்துகள்' முதலான பகுதிகள் இதற்குத் துணை செய்கின்றன.

## 5. காவல் பணி

மக்களாட்சியில் மக்களின் உரிமைகளைக் காக்கின்ற பணியையும் இதழ்கள் செய்ய வேண்டும். இதனால் தான் பத்திரிகையை, "மக்களாட்சியின் காவல் நாய்" (Watch dog of democracy) என்று அழைக்கின்றனர்.

## ஜான் பிரைஸ் (John Bryce)

"செய்தித்தாள்களின் வெளியீட்டால்தான் மக்களாட்சி நன்கு இயங்க இயலும்" என்கிறார். மக்களின் உரிமைகள் பாதிக்கப்படுகின்ற பொழுது இதழ்கள் போராட்டங்கள் நடத்தியுள்ளன.

எந்த நாடுகளில் எல்லாம் பத்திரிகை தனது பணிகளைச் சரிவரச் செய்ய முடியாமல் கட்டுப்பட்டிருக்கின்றனவோ அங்கெல்லாம் மக்களாட்சி முடங்கிக் கிடக்கும். ஆகவே, இதழ்கள் மக்களாட்சியின் உயிர்மூச்சாகத் திகழ்கின்றன.

## ஆட்சியில் இதழ்களின் பங்கு

ஒரு காலத்தில் அரசு, உள்நாட்டில் அமைதியை நிலைநாட்டுவது, மக்களுக்கு நீதி வழங்குவது, வெளித்தாக்குதல்களில் இருந்து மக்களைக் காப்பாற்றுவது முதலான பணிகளைச் செய்து வந்தன. இப்பொழுது அரசு 'நல அரசாக' இருக்க வேண்டுமென்ற கருத்து வளர்ந்துள்ளது. மக்களின் நலனைக் கட்டிக் காக்கவும் வளர்க்கவும் அரசுக்கு இதழ்கள் துணை நிற்கின்றன.

## ஆர்.கே.சாட்டர்ஜி கூற்று

"இன்றைய சிக்கலான சமுதாய அமைப்பில் பொதுமக்கள் தொடர்பின் பங்கு நல்லமுறையில் ஆக்கபூர்வமானதாக இருக்க வேண்டும். ஓர் அரசு மக்களாட்சி முறையில் அமைந்தாலும், சர்வாதிகார முறையில் அமைந்தாலும் அங்குப் பொதுமக்கள் தொடர்புக்குத் தேவை இருக்கின்றது. ஒரேயொரு மிகவும் முக்கியமான வேறுபாடு என்னவென்றால் சர்வாதிகார நாடுகளில் மக்கள்

Scanned by CamScanner

தொடர்புப் பணிகள் முழுக்கட்டுப்பாட்டுடன் செயல்படும். அதாவது கருத்துகளை வெளியிடும் சுதந்திரம் இருக்காது. மக்களாட்சியில் மக்கள் கருத்துக்களை உணர்ந்து இணங்கச் செய்யும் முறை பின்பற்றப்படும்'' என்று கூறியுள்ள கருத்து நோக்கத்தக்கது.

## டி.எஸ்.மேத்தா கூற்று

மக்களின் நலன்களைக் காக்கவும் வளர்க்கவும் அரசுக்கு இதழ்கள் துணை நிற்கின்றன. மக்களாட்சியில் இதழ்களின் பங்கு பற்றி டி.எஸ்.மேத்தா என்னும் ஆய்வாளர் கூறும் கருத்துகள் நினைவில் கொள்ளத்தக்கன.

"பொதுமக்கள் கருத்தை உருவாக்குவதிலும் செப்பனிடுவதிலும் பிரதிபலிப்பதிலும் மக்களாட்சி நடைபெறும் நாட்டில் பத்திரிகை மிகவும் முக்கியமானதாகச் செயல்படுகின்றது. பத்திரிகை நமது சமுதாயத்தின் ஆதார நிறுவனமாகும். நாட்டில், அரசியல் சமுதாய பொருளாதார வளர்ச்சியினைச் சிறப்பாக ஏற்படுத்த அது மிகவும் துணை செய்கின்றது. பத்திரிகை, அரசு செயல்படுவதோடும் அது பின்பற்றும் கொள்கையோடும் நெருக்கமாகத் தொடர்பு கொண்டிருக்கின்றது. நமது பொது வாழ்க்கையின் ஒவ்வொரு கூறுபாட்டையும் அது தொடுகின்றது'' என்கிறார் டி.எஸ்.மேத்தா.

நமது நாட்டில் விடுதலை இயக்கத்திற்குப் பத்திரிகைகள் பெரிதும் துணைபுரிந்தன. விடுதலை இயக்கத்தை நடத்திய தலைவர்களில் பலர், தங்களது இயக்க வளர்ச்சிக்கு உதவும் வகையில் தாங்களே இதழ்களை நடத்தினர். பத்திரிகையாளர்கள் நாட்டுப்பற்றும், விடுதலை வேட்கையும் உடையவர்களாக இருந்தனர். இந்திய இதழ்கள் துணிச்சலோடு அரசினை எதிர்த்து, உண்மையினை எடுத்துரைக்கும் மரபின் வழியில் வளர்ந்தன. எதிர்நீச்சல் போடுவது இந்திய இதழ்களின் இயல்புகளில் ஒன்றாயிற்று.

இந்திய இதழ்கள் நாடு விடுதலை பெற்ற பிறகு நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தை உணர்ந்து செயல்படத் தொடங்கின. மரபுவழி அரசின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் 'தலைமை ஆய்வாளர்' பணியோடு, பொதுமக்களைத் தூண்டுகின்றவராகவும் சமுதாய ஆசிரியராகவும் இதழ்கள் செயல்படுகின்றன.

மக்களாட்சி வெற்றிபெற வேண்டுமானால் மக்கள் ஓரளவு விவரம் புரிந்தவர்களாக இருக்க வேண்டும். இதற்கு வேண்டிய சமுதாயக் கல்வியை இதழ்கள் வழங்குகின்றன. செய்திகளை மட்டுமின்றி, அவை பற்றிய கட்டுரை, தலையங்கம், அவை சம்பந்தமான அலுவலர்கள், தலைவர்களின் பேட்டிகள் முதலானவற்றையும் வெளியிடுகின்றன. மக்களது ஐயப்பாடுகளைப் போக்கி, வழிகாட்டும் நல்லாசிரியராகவும் இதழ்கள் செயல்படுகின்றன.

ஓர் அரசாங்கத்தில் எதிர்க்கட்சிகள் முக்கியப் பங்கை வகிக்கின்றன. வலுவான எதிர்க்கட்சிகள் இல்லாதபோது அவற்றின் பணியினை இதழ்கள் செய்கின்றன. அரசின் பொது நலனுக்கு எதிரான போக்குகளை 'வெளிச்சம்' போட்டுக்காட்டி, கட்டுப்பாட்டிற்குள் செயல்பட அரசினைத் தூண்ட இயலும்.

Scanned by CamScanner

## காந்தியடிகள் அறவுரை

"மக்களின் கருத்தை வெளிக்காட்டும் செய்தித்தாட்கள் இல்லை என்றால், அரசு அதனை எப்படி அறிந்து கொள்ள இயலும்? பொது மக்களின் கருத்துக்கு பிரதிநிதிகளாக இருக்கும் செய்தித்தாட்களை அரசு கட்டுப் படுத்தக் கூடாது" என்கிறார்.

பொறுப்புள்ள இதழ்கள் மக்களரசின் வளர்ச்சிப் பணிகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்க வேண்டும். நாட்டின் நலத் திட்டங்களை மக்கள் அறிந்து, உணர்ந்து, பங்குபெற எல்லா வகைகளிலும் உதவ வேண்டும். நமது நாட்டின் வளர்ச்சிக்குத் தடைக்கல்லாக இருக்கும் சாதி, மத வேறுபாடு, ஏற்றத்தாழ்வு, பிற்போக்கு மனப்பான்மை முதலானவைகளை இனங்காட்டி, அவைகளைப் புறக்கணிக்க வேண்டும். பொது மக்கள் நாட்டுப் பற்றோடு செயல்பட இதழ்கள் தொண்டு செய்ய வேண்டும்.

Scanned by CamScanner

DATE : / /

# அலகு - 1

1. இதழியல் குறித்து அறிஞர்களின் கருத்துகளை எழுதுக
2. டெலிவிஷன் பெயர் தோன்றிய முறையை விளக்குக
3. தொலைக்காட்சியின் தோற்றம் பற்றி எழுதுக.
4. தொலைக்காட்சி பலவகை நோக்கு மற்றும் இயங்கும் முறை பற்றி குறிப்பிடுக.
5. தொலைக்காட்சி இணைப்பண்புகளைக் கூறுக.
6. வானொலி தோன்றிய வரலாறு பற்றி குறிப்பிடுக.
7. இந்திய வானொலியின் வளர்ச்சி குறித்து விளக்குக.
8. வானொலியின் நோக்கமும், தனித்தன்மைகளும் பற்றி விளக்குக.
9. வானொலிக் கோட்பாடுகள் யாவை?
10. வானொலியால் ஏற்படும் பயன்கள் யாவை?
11. இந்தியாவில் திரைப்படம் பெறும் இடத்தை விளக்குக.
12. பேசும் படம் பற்றி விளக்குக.
13. பத்திரிகைகளின் இலக்கியப்பணி குறித்து எழுதுக.
14. பத்திரிகைச் சுதந்திரம் குறித்து எழுதுக.
15. இதழியலின் விளக்கம் மற்றும் இலக்கணம் குறித்து விரிவாக எழுதுக.
16. இந்தியாவில் தொலைக்காட்சி தோன்றி வளர்ந்த வரலாறு பற்றி விளக்குக.
17. வானொலியின் தோற்றம், வளர்ச்சி, பயன்கள், நிகழ்ச்சிகள் குறித்து விரிவாக எழுதுக.
18. மக்கள் தொடர்புச் சாதனங்களுக்கும், பத்திரிகைகளுக்கும் இடையேயுள்ள ஒற்றுமை வேற்றுமைகள் யாவை?
19. மக்கள் தொடர்பு கருவிகளில் பத்திரிகைகள் குறித்து எழுதுக
20. திரைப்படத்தின் தோற்றமும், வளர்ச்சியும் குறித்து கட்டுரை வரைக.

Scanned by CamScanner

DATE : / /

21. பத்திரிகைகளின் பணிகள் குறித்து விவரித்து எழுதுக.

22. இதழியல் விதிகள் குறித்து விளக்கமாக எழுதுக.

23. பத்திரிகைகளின் பொறுப்புகளும், கடமைகளும் குறித்து எழுதுக.

24. மக்களாட்சியில் பத்திரிகைகளின் பங்கு பற்றி விவரி.

25. விடுதலை இயக்கத்தில் பத்திரிகைகளின் பணிகளை எழுதுக

Scanned by CamScanner